இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 15.04.2026

# நெல் விளைச்சலைத் தடுப்பதா?

மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு ஒரு கடிதம் அனுப்பி இருப்பதாகவும், நெல்லுக்கு நீங்கள் ஊக்கத்தொகை தருவதால்தான் நெல் விளைச்சல் அதிகமாவதாகவும், எனவே ஊக்கத்தொகையை நிறுத்துங்கள் என்று சொன்னதாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பரப்புரையில் குறிப்பிட்டார்கள்.

அப்படிச் சொல்லவில்லை, அது மாநில அரசின் விருப்பம் என்றுதான் சொன்னோம் என்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். 'அப்படியானால் அந்த கடிதத்தைக் காட்டுங்கள்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடிதத்தைக் காட்ட மறுக்கிறார் நிதி அமைச்சர்.

வேளாண்மையில் தாக்குதல் நடத்துவது பா.ஜ.க.வுக்கு புதிதல்ல. மூன்று வேளாண் சட்டங்களே வேளாண்மையைச் சிதைப்பதற்கும், உழவர்கள் வாழ்க்கையைக் குலைப்பதற்கும்தான் கொண்டு வரப்பட்டது. இரண்டு ஆண்டு காலம் தலைநகர் டெல்லியில் உழவர்கள் நடத்திய தொய்வில்லாத போராட்டத்தின் காரணமாகத்தான் மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்றார்கள்.

இதோ இப்போது அதே போன்ற சட்டத்தை அரசின் உத்தரவாக மாநிலங்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள்.

**"நெல் உற்பத்தி அதிகரித்திருப்பது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்துவதாக அந்தக் கடிதம் கூறுகிறது. எனவே நெல் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதை மாநில அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது," என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.**

**"அப்படிச் சொல்லவில்லை, ஊக்கத்தொகை வழங்குவது மாநில அரசின் முடிவு என்றுதான் சொன்னோம்" என்கிறார் நிர்மலா சீதாராமன்.**

**ஒன்றிய நிதி அமைச்சகம் தமிழ்நாடு, கேரளா உள்படப் பல்வேறு மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், "சமீபத்திய ஆண்டுகளில் கோதுமை, நெல்லின் அபரிமிதமான உற்பத்தி தேவைகளைவிட மிக அதிகமாக உள்ளது. இது ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. இது தானியக் கிடங்குக்குத் தொடர்ச்சியான சுமையை உருவாக்குகிறது. சில மாநில அரசுகளால், கோதுமைக்கு (குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேற்பட்டு) கூடுதல் ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டது, இந்த உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டாகச் சொன்னார்கள்.**

**நெல், கோதுமையை அதிகளவில் உற்பத்தி செய்வதால் ஏற்படும் பாதிப்புகளை அந்தக் கடிதம் பட்டியலிடுகிறது. " நெல்,கோதுமை போன்றவைக்கு அதிகளவில் நீர் தேவை. அதிக உரம் தேவை. எனவே நெல்,கோதுமை சாகுபடியானது நிலத்தடி நீரைக் குறைக்கிறது" என்று அந்தக் கடிதத்தில் உள்ளது. இல்லை என்று சொல்கிறாரா நிர்மலா சீத்தாராமன்?**

**"நெல்,கோதுமை உற்பத்தியை அதிகளவில் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் எண்ணெய் விதைகள் (நிலக்கடலை, எள், சூரியகாந்தி விதை போன்றவை) மற்றும் பருப்பு வகைகளின் உள்நாட்டு உற்பத்தி போதுமானதாக இல்லாதது, அதிக இறக்குமதிக்கு வித்திடுகிறது," என்று அந்தக் கடிதம் கவலைப்படுகிறது.**

**இந்தக் கவலையை எல்லாம் சொல்லி விட்டுச் சொல்கிறார்கள், "எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு, மாநில அரசுகள் தற்போதைய ஊக்கத்தொகை கொள்கையை மறுபரிசீலனை செய்து, கோதுமை மற்றும் நெல் மீதான ஊக்கத் தொகையை நிறுத்துவதைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதோடு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் நிலையான வேளாண்மைக்கான தேசிய முன்னுரிமைகளுக்கு இணங்க, பயறு வகைகள், சிறுதானியங்களை ஊக்குவிப்பதற்கான சலுகைகள் மீது கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது," என்று மத்திய நிதி அமைச்சகம் தனது கடிதத்தில் கூறியுள்ளது.**

இப்படி தெளிவாகச் சொல்லப்பட்டதைத் தான் இல்லை என்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். இப்படி ஒரு கடிதம் அனுப்பியதை எதிர்த்து மாநிலங்களவையில் கேரள மாநில உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் பகிரங்கமாக கேள்வி எழுப்பியதை இல்லை என்று மறுக்கிறாரா நிதி அமைச்சர்?

**"குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு மேல் ஊக்கத்தொகை அல்லது போனஸ் அறிவிப்பது என்பது எப்போதும் மாநில அரசுகளின் தனிப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டது" என்று மழுப்பி இருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.**

**"மாநில அரசுகள் வழங்கும் ஊக்கத்தொகை கொள்கைகளை தேசிய முன்னுரிமைகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற ஒரு ஆலோசனையே தமிழகத்திற்கு மட்டுமல்லாது, அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டது" என்று நிர்மலா சீதாராமன் சொல்வதற்கு என்ன பொருள்? ஒன்றிய அரசு தருவதற்கு மேல் தரக்கூடாது என்பது தானே பொருள்?' நாங்கள் தருவதற்கும், நீங்கள் தருவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை' என்றல்லவா சொல்ல வேண்டும்?**

**மாநில அரசுகள் ஊக்கத்தொகை தருவதால் தான் உற்பத்தி அதிகரிக்கிறது என்றும், உற்பத்தி அதிகரிப்பதால் நிலத்தின் தன்மை பாதிக்கப்படுகிறது என்றும் சொன்னது உண்மையா இல்லையா?**

* விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக மேம்பாடு எளிமைப்படுத்துதல் சட்டம்

* விவசாயிகளுக்கு விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் சேவைகள் சட்டம்

* அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டம் ஆகிய மூன்று சட்டங்களை ஒன்றிய அரசு கொண்டு வந்தது. அதற்கு என்ன காரணம் சொன்னார்கள்? உற்பத்தியை அதிகரிக்க என்றுதான் சொன்னார்கள்.

விவசாயிகள், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், ஜனநாயக சக்திகள் ஆகியோரின் கடுமையான எதிர்ப்பின் காரணமாகத் திரும்பப் பெறுவதாக பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் அறிவித்தார்கள்.

"புதிய வேளாண் சட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் விவசாயத்தின் மீது தனியார் முதலீடுகள் செய்வதை அதிகரித்து கிராமப்புறங்களில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும். தனியார் முதலீடுகள் அதிகரிக்கும் போது, விவசாயம் தொடர்ந்து இலாபகரமான துறையாக உருவெடுக்கும். தனியார் முதலீடுகள் இல்லாததால்தான் விவசாயத்தின் வளர்ச்சியில் சரிவு ஏற்பட்டுள்ளது. ஆனால் தனியார் முதலீடுகளை ஈர்த்த பிற துறைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. புதிய வேளாண் சட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலமாக விவசாயத்தில் தனியார் முதலீடுகளை ஈர்க்க பிரதமர் மோடி முயற்சி மேற்கொண்டுள்ளார்" என்று ஒன்றிய வேளாண் அமைச்சர் தோமர் சொன்னார்.

மூன்று வேளாண் சட்டங்களைச் செயல்படுத்தாத சூழலிலும் உற்பத்தி அதிகம் ஆகி இருக்கிறது. இப்போது உற்பத்தியைக் குறைக்கச் சொல்கிறார்கள்.

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் சட்ட திட்டங்கள் அனைத்தும் முன்னுக்குப் பின் முரணாகவே இருக்கிறதே!**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.4.2026) அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வேலூர் மாவட்டம், காட்பாடி தொகுதி விருதம்பட்டு பகுதியில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், திருவுருவச் சிலைக்கு கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் திருமதி ராஜேஸ்வரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு குரலையும் காக்க

# நமது உறுதியை வலிமைப்படுத்துவோம்!

## அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப். 15 -**

**"ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு குரலையும் காக்க நமது உறுதியை வலிமைப்படுத்துவோம்" என்று கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கூறியுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை, பெண்கள் எட்டியுள்ள முன்னேற்றத்தின் அளவினாலே நான் அளவிடுகிறேன்."**

**- அண்ணல் அம்பேத்கர்.**

**புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளில், அரசியலமைப்பைப் பாதுகாக்கவும், சமூக நீதியை நிலைநாட்டவும், ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு குரலையும் காக்கவும் நமது உறுதியை வலிமைப்படுத்துவோம்!**

**இந்தியாவின் வலிமை நம் பன்மைத்துவம்தான்; திணிக்கப்படுகிற ஒற்றைத்தன்மை அல்ல. முன்னேற்றமே அளவுகோல் எனில், ஒற்றைத்தன்மையையும், ஏற்றத்தாழ்வுகளையும் புறந்தள்ளி, பன்மைத்துவத்தையும் சமத்துவத்தையும் தேர்ந்தெடுப்போம்; நீதியை நிலைநாட்டுவோம்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

## திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் பொதுக்கூட்டம்:

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரையாற்றுகிறார்!

## அமைச்சர் எ.வ.வேலுவை ஆதரித்து பிரச்சாரம்!

*திருவண்ணாமலை, ஏப். 15 -*

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளர், அமைச்சர் எ.வ. வேலுவை ஆதரித்து, மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை ஆற்றுகிறார்.

நாளை (16.04.2026) மாலை 6.00 மணிக்கு திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலுவை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சி.மூர்த்தி தலைமை வகிக்கிறார்.

காங்கிரஸ் மாவட்டத் தலைவர் கே.குணசேகரன், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் சீனி.கார்த்திகேயன், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் வி.எம்.நேரு, சி.பி.எம். மாவட்டச் செயலாளர் ப.செல்வன், சி.பி.ஐ. மாவட்டச் செயலாளர் இரா.திருமலை, முஸ்லிம் லீக் ஐ.எம்.சுலைமான் கான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் ச.நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி ஏ.ஆர்.நாசர் உசேன், மக்கள் நீதி மய்யம் மண்டலப் பொறுப்பாளர் இரா.அருள், மனிதநேய ஜனநாயகக் கட்சி ஜி.கேட்குமார், எஸ்.டி.பி.ஐ. மாவட்டச் செயலாளர் ஏ.முஸ்தாக் பாஷா, தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு.ராஜாராம், இந்திய குடியரசுக் கட்சி ஆர்.ஆறுமுகம்,

ஆதித் தமிழர் பேரவை எஸ்.கந்தன், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் கட்சி பி.வாசு, தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா, தமிழ்ப்புலிகள் கட்சி எஸ். கண்ணையன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், கழக வேட்பாளரும், அமைச்சருமான எ.வ.வேலுக்கு வாக்குகள் சேகரித்து சிறப்புரை ஆற்றுகிறார்.

நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், பகுதிச் செயலாளர்கள் சு. விஜி (எ) விஜயராஜ், அ. கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் கூட்டணி இயக்கத்தின் ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

நிறைவாக மாவட்ட துணைச் செயலாளர் பிரியா ப.விஜயரங்கன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சியினை மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் பணிக்குழு செய்து வருகிறது.

## ராகேஸ் லா பவுண்டேஷன் சார்பில் கருத்தரங்கம்!

# இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி சுற்றுச்சூழலுக்கான உரிமைகளும் கடமைகளும்!

## சென்னையில் நடைபெறுகிறது!

*சென்னை, ஏப். 15 -*

சென்னையில் ராகேஸ் லா பவுண்டேஷன் சார்பில் வருகிற 18ஆம் தேதி வள்ளுவர் கோட்டத்தில் மாலை 5 மணியளவில், 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி சுற்றுச் சூழலுக்கான உரிமைகளும் கடமைகளும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

ரோஜா முத்தையா ஆய்வு நூலக இயக்குநர் டாக்டர் ஜி.சுந்தர் வரவேற்கிறார். சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஏ.கே. சச்சின்தர் அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி அபாய் சீனிவாஸ் ஒகே சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்து என். ராம், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம். அக்பர் அலி பங்கேற்றுப் பேசுகின்றனர்.

டாக்டர் எம். ரஞ்சித் நன்றி கூறுகிறார்.



வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. சார்பில் போட்டியிடும் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விருதம்பட்டு பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் காந்தி நகர் பகுதிச் செயலாளர் என்.பரமசிவம் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.